3. தகவல் கோரல்

சென்னை, யானைக்கவுனி பால விரிவாக்கம், போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள். கொடுத்திருக்கின்ற தீர்மானத்தைப்பற்றி சுருக்கமாகப் பேசுங்கள். விதி 55—ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளீர்கள். இதனை தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன்.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னை மக்களால் யானைக்கவுனி பாலம் என்று அழைக்கப்படுகின்ற நைனார் பாலம், மத்தியப் பகுதியை விரிவுபடுத்துவதற்காகவும், 47X140 மீட்டர் அளவுக்கு இருப்புப் பாதையை அகலப்படுத்துவதற்காகவும் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக சென்ட்ரல், மூலக்கொத்தளம், தங்க சாலை ஆகிய பகுதிகளின் வாயிலாக வாகனங்கள் அதிகளவு செல்வதால் மிகுந்த போக்குவரத்து நெரிசலுக்கு வடசென்னை மக்கள் இன்றைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இரயில்வே துறையும், சென்னை மாநகராட்சியும் இணைந்து பாலத்தின் மையப் பகுதியை 50, 50 சதவிகிதம் என்ற நிதி ஒதுக்கீட்டின்படி கட்ட உள்ளன. ஆனால், அந்தப் பாலப் பணிகளுக்கு இதுவரையில் ஒப்பந்தப்புள்ளிகூட கோரப்படவில்லை. அந்தப் பாலத்திற்குண்டான வரைவு அதாவது design கூட தயாரிக்கப்படவில்லை. ஆண்டுக் கணக்கில் அந்தப் பாலப் பணியை எடுத்துச் செல்லாமல், கடந்த காலங்களில் எங்கள் தளபதி அவர்கள், சென்னை மாநகரில் செயல்படுத்திய பாலங்களைப்போல், எங்கள் செயல் தலைவரும் சுறுசுறுப்பும்போல் இந்தப் பாலப் பணியை சுறுசுறுப்போடு செயல்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் பயன்பாட்டிற்கு விடவேண்டி, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய கவனத்தையல்ல. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2017 மார்ச் 22*

பிற்பகல் 12–05

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியில் வால்டாக்ஸ் சாலை மற்றும் ராஜா முத்தையா சாலையை இணைக்கும் யானைக்கவுனி பாலச் சாலையில் அமைந்துள்ள யானைக்கவுனி பாலம் இரயில்வே துறையைச் சார்ந்ததாகும். இப்பாலத்தின் இருபுறமும் அணுகு சாலைப் பகுதி மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பாலம் தற்போது மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தினால் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் செல்வதற்கு இரயில்வே துறை, போக்குவரத்துத் துறை மற்றும் காவல் துறையால் தடை செய்யப்பட்டுள்ளது. இப்பாலத்தில் இருசக்கர வாகனங்கள் மட்டுமே செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரயில்வே துறையின்மூலம் இப்பாலத்தின்கீழ் தற்காலிகமாக இரும்புத் தூண்கள் நிறுத்தப்பட்டு பலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பாலத்தின்கீழ் உள்ள இருப்புப் பாதைகளைக் கூடுதலாக அமைக்க ஏதுவாக பாலத்தின் இரயில்வே பகுதி இடம் 47 மீட்டர்தான் இப்போது இருக்கிறது. 47 மீட்டரிலிருந்து 150 மீட்டருக்கு அகலப்படுத்த இரயில்வே துறை உத்தேசித்துள்ளது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினரும் குறிப்பிட்டார். இப்பாலத்தை இடித்துவிட்டு புதிதாக மேம்பாலம் அமைக்கும் பணியை இரயில்வே துறையும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியும் இணைந்து 50:50 நிதி பங்கீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரயில்வே பகுதி பாலத்தை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை மற்றும் வடிவமைப்புப் பணிகள் தயார் செய்யப்பட்டு வருவதாக இரயில்வே துறை தெரிவித்துள்ளது. இரயில்வே துறையிலிருந்து விரிவான திட்ட அறிக்கை வந்த பின்னால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி அதைக் காலதாமதப்படுத்தாமல் கண்டிப்பாக அணுகு சாலை பகுதிக்கான விரிவான திட்ட அறிக்கை வந்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கும். பழுதடைந்த பாலத்தின்கீழ் இரும்புத் தூண்களை நிறுத்தி பலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதால் யானைக்கவுனி மேம்பாலத்தில் கனரக மற்றும் இலகுரக வாகனப் போக்குவரத்து தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. தற்போது பேசின் பிரிட்ஜ் மற்றும் ராஜா முத்தையா சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலையின் வழியாக போக்குவரத்து திருப்பி விடப்பட்டுள்ளது என்பதை*

2017 மார்ச் 22] **[திரு. எஸ்.பி. வேலுமணி]**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, இரயில்வே துறையின் திட்ட அறிக்கை தயாரானதும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாக மாநகராட்சி நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. வரவு–செலவுத் திட்டம், 2017–2018, பொது விவாதம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை இந்த அவையிலே சொல்வதற்கு பொன்னான வாய்ப்பை வழங்கிய எங்கள் இயக்கத்தினுடைய தலைவர், திராவிட இயக்கத்தின் முதுபெருந்தலைவர், மூதறிஞர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை இயக்குகிற தலைவராய், இலட்சக்கணக்கான ஏழை மக்களுக்குப் பாதுகாவலராய், குறிஞ்சி மலர் நாயகனாய், வெல்லுடை வேந்தராய், திராவிட இயக்கத்தினுடைய கையிருப்பாக நாங்கள் என்றைக்கும் மதிக்கக்கூடிய எங்கள் ஆருயிர் அண்ணன் முத்துவேலரின் பேரப்பிள்ளை, முத்தமிழ் அறிஞரின் வீரப்பிள்ளை, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கழகத்தின் சட்டமன்றக் கொறடா அண்ணன் திரு. அர. சக்கரபாணி அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

திராவிட முன்னேற்றக் கழகத்தில் தேர்வு செய்யப்பட்டு, இரண்டாவது முறை சட்டமன்ற உறுப்பினராக இந்த அவையிலே நின்று நிதிநிலை அறிக்கையைப் பற்றியும், நாட்டு மக்களுடைய தேவையைப் பற்றியும், ஏழையெளிய மக்களுடைய குமுறல்களைப் பற்றியும் இந்தச் சபையிலே நான் பேசுவதற்கான வாய்ப்பினை